©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
விலை: ரூ. 1.60 காசு

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 38] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 23, 2026
புரட்டாசி 6, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

# பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 06 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 12/2026.**

**2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தம் மற்றும் செல்லுந்தன்மைச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) 2 ஆம் பிரிவானது, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்பட வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள பிரிவுகள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) 2 ஆம் பிரிவின் (a) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 40/2010.

"(a) "நேரடி ஆள்சேர்ப்பு" என்பது, அரசின் கீழ்வரும் எந்தவொரு பணியிலும் உள்ள ஒரு பதவிக்கு, நடைமுறையிலுள்ள விதிகள் அல்லது ஒழுங்குமுறைகள் அல்லது ஆணைகளுக்கு இணங்க, ஒரு பொதுப் போட்டித் தேர்வு, நேர்முகத்தேர்வு அல்லது இரண்டின் மூலமாக, ஒரு நபரை பணி நியமனம் செய்தல் எனப் பொருள்படும்; ஆனால் பணி மாறுதல் மூலம் ஆள்சேர்ப்பு வாயிலாக செய்யப்படும் பணி நியமனம் இதில் உள்ளடங்காது."

விளக்கம்.– இந்தக் கூறின் நோக்கத்திற்காக "பணி மாறுதல் மூலம் ஆள்சேர்ப்பு" என்பது, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2016), 3 ஆம் பிரிவின் (s) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள, அதே பொருளைக் கொண்டிருக்கும்.

3 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1–A) அரசின் கீழுள்ள எந்தவொரு பணியிலும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒதுக்கப்பட்ட முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு, முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட ஒரு நபர், மிகை ஊதிய விகிதத்தைக் கொண்ட பதவியைத் தவிர, மீண்டும் அத்தகைய காலிப்பணியிடங்களுக்குப் போட்டியிட உரிமையற்றவராகிறார்:

வரம்புரையாக, ***தமிழ்நாடு அரசிதழில்*** 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தம் மற்றும் செல்லுந்தன்மைச்) சட்டம் வெளியிடப்படும் தேதிக்கு முன்னர் அறிவிக்கை செய்யப்பட்ட முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு இந்த உட்பிரிவு பொருந்தாது.".

செல்லுந்தன்மை

4. முதன்மைச் சட்டம் அல்லது எந்தவொரு நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முன்னுரிமை காலிப் பணியிடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள அரசின் கீழுள்ள பணிகளில் ஏதேனும் ஒன்றில், ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கை எதுவும் அல்லது ஏற்கனவே, அரசின் கீழ் பணியில் இருக்கும் நபர் ஒருவரின் அத்தகைய முன்னுரிமை காலிப் பணியிடங்களுக்கான எந்தவொரு நியமனமும், 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி தொடங்கி, ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியுடன் முடிவடையும் காலகட்டத்தில், அத்தகைய அறிவிக்கையின் அடிப்படையில் செய்து முடிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும், அனைத்து நோக்கங்களுக்காகவும், இந்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டமானது, அத்தகைய அறிவிக்கை வெளியிடப்பட்ட மற்றும் அத்தகைய நியமனம் செய்யப்பட்ட மற்றும் அத்தகைய செயல் செய்து முடிக்கப்பட்ட அல்லது நடவடிக்கை எடுக்கப்பட்ட, அனைத்து முக்கியமான நேரங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தால் எவ்வாறு கருதப்படுமோ, அதுபோலவே சட்டத்திற்கிணங்க எப்போதும் செல்லுந்தன்மையுடன் வெளியிடப்பட்டதாகவும், செய்யப்பட்டதாகவும், செய்து முடிக்கப்பட்டதாகவும் அல்லது எடுக்கப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ப. சுமதி,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.